திரு. வி. கே. கோதண்டராமன் : தலையணை உறையை ஓரளவிற்கு வசதியுடையவர்கள்தான் வாங்க முடியும். அதற்கு விதி விலக்குக் கொடுத்திருக்கிறோம். பாமர மக்கள் வாங்கக் கூடிய ஜவுளிக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளித்தால் பாமர மக்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, எல்லாக் கைத்தறித் துணிகளுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு க. எம். ராஜா அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. விற்பனை வரி கைத்தறித் தொழிலுக்கு இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தேசம் அல்ல. எல்லாவற்றிற்குமே வரி இல்லாமல் இருக்கக்கூடிய அரசாங்கம் வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கொள்கை. ஆனால் அந்தக் காரியத்திற்கு மத்தியில் சில தவிர்க்க முடியாத விதி, கடமைகளை அரசு மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த அம்சத்தின் அடிப்படையில்தான் அது பரிசீலிக்கப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : May I know what the total collection made is by way of sales tax on handloom goods sales in our State. If there is waiver of the tax, would it affect our Exchequer very badly?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I want notice, Sir.

Crop failure in Tiruchirappalli district

* 133 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pheased to state—

(*a*) whether the Government have received any report from the Collector of Tiruchirappalli district relating to crop failure in that district this year (1968); and

(*b*) if so, whether a copy of the report will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. ராஜ குமார் விஜய ரகுநாத தொண்டமான் : ஒரு மாதத்திற்கு முன்பு, புதுக்கோட்டை டிவிஷனிலுள்ள விவசாயிகள் பல மனுக்களைக் கலெக்டரிடம் கொடுத்தார்கள். சாவியாய்ப் போன இடங்களுக்கு வரி வஜா செய்ய வேண்டும், கடன் தவணையைத் தள்ளிப் போடவேண்டும், கொள்முதலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தார்கள். அதைப் பற்றிக் கலெக்டர், அரசாங்கத்திற்குத் தகவல் ஏதேனும் தெரிவித்தாரா, அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றிய விவரம் தற்போது என் வசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, திருச்சியைப் போலவே இந்த ஆண்டு தென்னார்காடு மாவட்டத்திலும் சில பகுதிகள் வறண்டு போயிருக்கின்றன. குறிப்பாகத் தென்னார்காடு மாவட்டத்தில், திண்டிவனம், செஞ்சி போன்ற பகுதிகள் பொதுவாகவே வறண்டு பாய்விடனவென்றாலும், தனித் தனி கிராமங்களாக எடுத்து, தவறான புள்ளி விவரங்களின் அடிப்படையில் சில கிராமங்களில் விளைச்சல் இருந்தது, சில இடங்

கள் வறண்டு போகவில்லை என்ற அளவில் கீழ் மட்டத்தில் இருக்கும் ரெவின்யூ அதிகாரிகள் அறிக்கை தயாரித்து, அந்தக் கிராமங்களுக்கு வரி வஜா கிடைக்காத நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா ? தெரிந்திருந்தால் அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கூற்று அரசுக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினருடைய கூற்றில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது, அதிகாரிகளுடைய கூற்றில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதைக் குறித்து, இரண்டிலுமுள்ள உண்மையின் அடிப்படையை நாம் பரிசீலனை செய்யலாம். அப்படி ஏதாவது தவறுகள் இருக்குமானால், அவற்றை அரசாங்கத்தின் கவனத்துக்குத் தாராளமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவரலாம்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில், ஸி.ஓ. 29 என்ற நெல் வகையைக் காலம் தாழ்த்திப் பயிரிடலாம் என்று விவசாயிகளுக்கு அரசு ஆலோசனை அளித்ததன் விளைவாகப் பயிரிடப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலமும், சாவியாகப் போய் அதனால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளது. எனவே, அந்த நெல் வகையைப் பயிரிட்டு நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடோ அல்லது கொள்முதலிலிருந்து விலக்கோ அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைகளிலெல்லாம் மாவட்டக் கலெக்டர் அவர்கள் கீழ் இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரி கொடுக்கின்ற அறிக்கைகளின் அடிப்படையில், வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரையோடு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அரசின் வேண்டுகோளுக்கு ஏற்பவும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடும், ஒரு போக நஞ்சை நிலங்களை, இரு போக நஞ்சை நிலங்களாக மாற்றிய விவசாயிகளைப் பொறுத்த வரையில், அப்படி இரு போகமாக மாற்றப்பட்ட நஞ்சை நிலத்திற்கு அடிப்படை நில வரியை நீக்கி, அவர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ? குறைந்தபட்சம் தஞ்சை மாவட்டத்திலாவது இதைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படை நில வரி (பேஸிக் லாண்டு டாக்ஸ்) பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலே புஞ்சை நில வரியை மட்டும்தான் நாம் நீக்கியிருக்கிறோம். நஞ்சைக்கு நில வரியை நீக்குவது என்பது கொள்கை பற்றிய பிரச்னையாகும். அதிலே இருக்கும் சட்ட சங்கடங்களை இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறேன். ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இரு போகமாகப் பயிர் செய்யப்படுகிற நிலங்களுக்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, இரண்டாவது போகத்திற்குக் கொடுக்கும் பாசனத்திற்கான நீர்த் தீர்வை (வாட்டர் ஸெஸ்) ரத்து செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. க. மு. ராசகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வறட்சி நிலைமை ஏற்பட்டு பெரும் பஞ்சமாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் அரசுக்குத் தர வேண்டிய கடன்களை ஓராண்டுக்கு ஒத்தி வைத்தும், நில வரியை ரத்து செய்தும், உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அத்தனையையும்—சாத்தியமானவைகளை—மாவட்டக் கலெக்டருடன் கலந்துகொண்டு, வருவாய்த்துறை வாரியத்தின் பரிந்துரையோடு ரெவின்யூ துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

(திரு என். வரதராஜன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலுமே வறட்சி நிலைமை இருக்கிறது. மூலக் கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது. எல்லா உறுப்பினர்களும் தங்கள் தங்கள் மாவட்டத்தைக் குறித்துக் கேட்டுக்கொண்டிருந்தால் மற்ற கேள்விகளுக்கு நேரம் போதாமல் போய்விடும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே, தமிழ் நாட்டில் இந்த ஆண்டு வறட்சி நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்களில் எந்த அளவு பாதிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அதற்குரிய முழு நிவாரணத்திற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது என்பதையும் பற்றிய விவரக் குறிப்பை இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் வைத்தால் உதவியாக இருக்காதா? அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதனுடைய விவரக் குறிப்பை என்னுடைய நிதி நிலை அறிக்கையிலே கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலேயே அடிக்கடி, பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கூட, வினா நேரம் முடிந்தவுடனே, செங்கற்பட்டு, வடாற்காடு, கோயம்புத்தூர், இன்னும் மற்ற மாவட்டங்களில் இருக்கும் வறட்சி நிலைமையைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வர இருக்கிறது. ஒரு கோடியே 51 இலட்சம் ரூபாய் இந்த நிவாரணத்திற்காகச் செலவு செய்ய ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மாவட்ட வாரியாக எவ்வாறு ஒதுக்கப்பட்டிக்கிறது என்பது விவரமாக நான் அளிக்க இருக்கும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த எந்த மாவட்டத்தில் என்ன என்ன வேலைகள் மேற்கொள்ளப்படும் என்பது அடிக்கடி இந்த மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Is there failure of crops in Tiruchirappalli district? Have the Government received reports with regard to total failure of crops there and may I know what is the position of Government with regard to procurement? Are the Government able to procure sufficiently according to their target and have the Government got reports that crops are all right from all districts? What is the general information emanating from the reports that all Collectors had sent to the Government?

THE HON THIRU K. A. MATHIALAGAN : I have no procurement figures at present. The hon. Member may put a question to the Hon. Minister for Food and elicit the information. But as far as I am aware the tempo of procurement is not commensurate with last year's performance.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 134, 135, 136, 137 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

மெட்டனில் மஞ்சள்

*138 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுக்கு மெட்டனில் மஞ்சள் கலர் **(Metanil Yellow)** விஷயத்தைப் பற்றி 29-9-1967-ம் தேதியில் எழுதப்பட்ட கடிதத்தின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?